**<u>அசல் வழக்கு எண். 43/2019</u>**

15.12.2021

**பெயர் – முத்துச்சாமி (Dw1)**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு சொந்த ஊர் எது என்றால் கொள்ளுப்பாளையம் அது பூர்வீக ஊராகும் . எனக்கு என்ன வயதாகிறது என்றால் 45 வயதாகிறது. எனக்கு 58 வயது என்று சொன்னால் அது தவறு . முருகேசன் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது . இந்த வழக்கில் என்ன எதிர்வாதம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா அல்லது சக்திவேல் பொன்னுச்சாமிக்கு தான் தெரியுமா என்றால் அவருக்கு தான் தெரியும் . வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள போதே இந்த வழக்கு சொத்துக்களை நானும் , கந்தசாமியும் சக்திவேல் மற்றும் பொன்னுசாமிக்கு விற்பனை செய்தோம் என்றால் நான் விற்கும் போது வழக்கு நிலுவையில் இல்லை. கந்தசாமி விற்கும் போது வழக்கு நிலுவையில் இருந்ததா என்ற விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் காலை எண். என்ன என்றால் 68/1 ஆகும். அந்த சொத்துக்கள் ஆதியில் எப்படி , யாருக்கு பாத்தியம் என்றால் சின்னச்சாமி கவுண்டருக்கு முன், அவரது அப்பா நாராயண கவுண்டருக்கும் பாத்தியப்பட்டது தெரியும் . நாராயண கவுண்டருக்கு முன்பாக யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது . நாராயண கவுண்டர் அவரது சொத்துக்களை தன் மக்களான குமாரசாமி கவுண்டர் , கருப்பண்ண கவுண்டர் பாகம் செய்து கொண்டதாக சொல்லியுள்ளேன் தேதி குறிப்பாக தெரியுமா என்றால் தேதி குறிப்பாக தெரியாது . நான் சின்னச்சாமி கவுண்டரிடம் சொத்து வாங்கும் போது தான் சொத்தின் பூர்வீகம் பற்றி எனக்கு தெரியும் . சின்னச்சாமி கவுண்டரிடம் கிரையத்திற்கு பெற்றேனா என்றால் ஆமாம் அப்போது தான் தெரியும். சாட்சி தற்போது சின்னச்சாமி கவுண்டர் தனக்கு பவர் ஏஜெண்ட் கொடுத்ததாக கூறுகிறார் . எனது நிரூபண வாக்குமூலத்தில் 5 வது பாராவில் சொல்லியுள்ளது நேரடியாக தெரியுமா என்றால் பத்திரத்தின் அடிப்படையில் தெரியும் . மெட்ராத்தி கிராமத்தில் பழனியம்மாளுக்கு எந்த க.ச. எண்ணில் எவ்வளவு விஸ்தீர்ணம் சுயமாக நிலம் பாத்தியப்பட்டது என்று தெரியுமா என்றால் க.ச.எண்.68/1 ல் உள்ளது மட்டும் எனக்கு தெரியும் . பத்திரத்தின் அடிப்படையில் பழனியம்மாளுக்கு என்னென்ன பூமிகள் பாத்தியப்பட்டது என்றால் பல

வருடம் ஆகிவிட்டது அதனால் ஞாபகம் இல்லை. 06.10.2021 அன்று நான் தாக்கல் செய்த முதல் விசாரணை வாக்குமூலத்தில் இந்த விவரங்களை நான் எப்படி சொன்னேன் என்றால் பத்திரத்தின் அடிப்படையில் சொல்லியுள்ளேன் . 68/2 நெ. காலையில் 3 ஏக்கர் 74 செண்ட் பாத்தியப்பட்டது என்பதை எந்த பத்திரத்தின் அடிப்படையில் நான் சொல்லியுள்ளேன் என்றால் க .ச. எண். 68/1 ன் பத்திரத்தின் அடிப்படையில் தெரியும் . க.ச.நெ. 68/2 ல் காலையில் உள்ள நிலம் பற்றி எனக்கு தெரியாது . அந்த பழனியம்மாளுக்கு பூமியை தவிர வேறு என்னென்ன சொத்துக்கள் பாத்தியம் இருந்தது என்றால் எனக்கு தெரியாது . எந்த பத்திரத்தின் அடிப்படையில் என்றால் க .ச.நெ.68/1 பத்திர அடிப்படையில் தான் தெரியும் . க.ச.நெ.68/1 காலை எந்த ஆவணத்தின் படி பாத்தியப்பட்டது என்றால் நாராயண சாமி சின்னச்சாமி கவுண்டருக்கு எழுதிக் கொடுத்த பத்திரத்தை வைத்து தெரிந்துகொண்டேன் . மேற்படி பத்திரம் எந்த தேதியில் குறிப்பாக எழுதப்பட்டது என்றால் ரொம்ப நாள் ஆகிவிட்டது ஞாபகம் இல்லை . நாராயணசாமி சின்னச்சாமி கவுண்டருக்கு கொடுத்த பத்திரம் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பழனியம்மாள் மற்றும் அவரது மகள்கள் எல்லாம் கூட்டாக பாகம் செய்து கொண்டார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் யார் , யார் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் அந்த விவரம் பற்றி எனக்கு தெரியாது . யார், யாரொல்லாம் பாகம் பிரித்து கொண்ட போது பணம் வாங்கி கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. அது எந்த பத்திரத்தில் வருகிறது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

ஒப்பம்/–திரு.ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்